


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 01.10.2018


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- போக்குவரத்து வாகனங்களுக்கான உயிரி எரிவாயு **(Compresses Bio-Gas)** உற்பத்திக்கான ஆலைகளை அமைக்கும் புதிய திட்டத்தினை மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதுடெல்லியில் அக்டோபர் 01, அன்று தொடங்கியுள்ளார்.
    - சதாத் **(SATAT- Sustainable Alternative Toward Affordable Transportation)** என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய எரிவாயு உற்பத்தி திட்டம் போக்குவரத்து வாகனங்களுக்கு மாற்று எரிவாயுவை தங்கு தடையின்றி கிடைக்க வகை செய்யும்.

- நிலைத்த மேம்பாட்டு இலக்குகளை அடைவதில் இந்தியாவின் நடவடிக்கைகளை உறுதிபடுத்துவதற்காக, 2018-2022 க்கான நிலைத்த கட்டமைப்பு ஒப்பந்தம் நிதி ஆயோக் **Sustainable Development Framework for 2018-2022** மற்றும் இந்தியாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்திற்குமிடையே கையெழுத்தாகியுள்ளது.
    - இந்த ஒப்பந்தத்தில் நிதி ஆயோக் முதன்மை நிர்வாக அலுவலர் **அமிதாப் காண்ட், Amitabh Kant** இந்தியாவில் உள்ள ஐ.நா.வின் ஒருங்கிணைப்பாளர் யூரி **அஃபனா சியவ் Yuri Afanasiev** ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

- இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சவுபாட்டியாவில் நடைபெற்று வந்த இந்திய இராணுவத்தினர் மற்றும் அமெரிக்க இராணுவத்தின் முதல் படைப் பிரிவைச் சேர்ந்த 23வது காலாட்படைப் பிரிவு ஆகிய இந்திய – அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியான **யுத் அபியாஸ் போர் Yudh Abhyas** பயிற்சி ஒத்திகை செப்டம்பர் 29 அன்று நிறைவுபெற்றுள்ளது.
- குறிப்பு
    - அமெரிக்க இராணுவ பசிபிக் கூட்டுத் திட்டத்தின் கீழ், **2004ம்** ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சி, தற்போது **14வது ஆண்டாக யுத் அபியாஸ் போர்** பயிற்சி என்ற பெயரில்

நடத்தப்பட்டு வருகிறது.

- **ஸ்மார்ட் சிட்டி எக்ஸ்போ இந்தியா Smart City Expo India 2018** என்ற பெயரிலான மூன்று நாள் நடைபெறும் சர்வதேச மாநாடானது இராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில் நடைபெற்றுள்ளது.
  - இம்மாநாட்டில் சிறந்த **ஸ்மார்ட் சிட்டிக்கான** விருது **ஒடிசா மாநிலத்தின் தலைநகர் புவனேஸ்வர்** நகருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் உள்ள ரயில்வே பாரம்பரிய இடங்களை இரயில்வே அமைச்சகம்- கூகுள் கலை, கலாச்சார நிறுவனம் இணைந்து டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் **(The Railways Lifeline of a Nation)** டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது.
  - இதில் யுனெஸ்கோவின் பாரம்பரிய நிறுவனச் சின்னங்கள் பட்டியலில் இடம்பெற்ற **ஊட்டி மலை ரயில், கால்கா- ஷிம்லா Kalka-Shimla** ரயில்வே, **டார்ஜிலிங்- ஹிமாலயன்** ரயில்வே, **காங்ரா வேலி Kangra Valley ரயில்வே** உள்ளிட்ட முக்கிய ரயில் வழித்தடங்கள் குறித்த தகவல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

## உலக நிகழ்வுகள்

- காச நோயை (TB - Tuberculosis) முற்றிலுமாக ஒழிக்க இந்தியாவுடன் அமெரிக்க இணைந்துள்ளது.
  - பொது மற்றும் தனியார் துறைகளில் இந்தியாவும் அமெரிக்கவும் இணைந்து **USAID – India End TB Alliance** என்னும் கூட்டமைப்பு நியூயார்க்கில் இந்திய சுகாதரத் துறை அமைச்சர் **ஜெ.பி நட்டா** மற்றும் அமெரிக்காவின் மார்க் கிரீன் இடையே ஏற்படுத்தப்பட்டது.



We Shine Academy™

## விளையாட்டு நிகழ்வுகள்

- துருக்கியில் உள்ள சாம்சன் நகரில் நடைபெற்று வரும் **உலக கோப்பை வில்வித்தை போட்டியில் Archery World Cup Final** பெண்களுக்கான ரிகர்வ் தனிநபர் பிரிவில் இந்திய வீராங்கனை **தீபிகா குமாரி வெண்கலப்** பதக்கத்தை வென்றுள்ளார்.
- குறிப்பு
  - ஜார்கண்டை சேர்ந்த தீபாகுமாரி உலக கோப்பை போட்டியில் பெற்ற 5வது பதக்கம் இதுவாகும்.

## விருதுகள்

- **பாரதீய வித்யா பவன்** அமைப்பின் மூலம் வழங்கப்படும் மிக உயரிய விருதான தமிழ் மாமணி விருது எழுத்தாளர் **'க. ரத்னம்'** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - **தமிழகத்தின் பறவைகள்** என்னும் நூல் இவரது முக்கியமான ஆக்கம் ஆகும்.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் - செப்டம்பர் 30 (International Translation Day)**
  - நாடுகளுக்கிடையே அமைதிக்கான புரிதல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை வளர்ப்பதில் மொழி வல்லுனர்களின் பங்கு குறித்த விழிப்புணர்விற்காக சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் செப்டம்பர் 30 அன்று கடைபிடிக்கப்பட்டது



We Shine Academy™